# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.77/2019 | Village | : | |
| Prosecution witness | : | PW- 9 | Taluk | : | |
| Name | : | **திரு. சுவாமிநாதன்** | Occupation | : | |
| Father Name | : | திரு. சங்கிலிமுத்து | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 04.08.2025.**

**A6 absent. U/s 355 BNSS filed and allowed. Others present.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தஞ்சாவூர் கீழவாசல் சாலைக்கார தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இறந்துபோன அப்பு என்கிற ஜெகன்நாதனை தெரியும் அவர் எனது மாமா பையன். ஆஜர் எதிரிகளை தெரியும். அப்பு வெட்டுபட்டு இறந்துபோனதாக கேள்விபட்டேன். வேறு எதுவும் தெரியாது. அதன்பிறகு என்ன நடந்தது என்று ஞாபகமில்லை. போலிஸார் என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ. 5**ஆகும். அதில் உள்ள 2வது கையெழுத்து எனது அண்ணனுடையது. என்ன விபரம் என்றால் சாட்சி கையெழுத்து போடச்சொன்னார்கள் போட்டேன். என்ன எழுதினார்கள் என்றால் கொலை செய்ததற்காக கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். வேறு எதுவும் கையெழுத்து வாங்கவில்லை. நான் 4கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ. 6** ஆகும். அதில் உள்ள 2வது கையெழுத்து எனது அண்ணனுடையது. கைது செய்யபட்ட நபரின் பெயர் தெரியாது. அரசு செய்த நபர்களை என்ன செய்தார்கள் என்றால் தெரியாது. 19.1.2018 தேதியிட்டு என்னுடைய கையெழுத்து உள்ள கைபற்றுதல் மகசரில் 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.7** ஆகும். 19.1.2018 16.45 மணிக்கு தயார் செய்துள்ள கைபற்றுதல் மகசரில் 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.8** ஆகும். 19.1.2018 19.30 மணிக்கு தயாரிக்கபட்ட

மகசரில் 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.9** ஆகும். 19.01.2018 19.45மணிக்கு தயாரிக்கபட்ட மகசரில் 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.10** ஆகும்.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 19.01.2018 அன்று என் முன்பாகவும் என் சகோதரன் இளவரசன் முன்பாகவும் 1வது எதிரி லெட்சுமணன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதனை தொடர்ந்து கைபற்றபட்ட கைபற்றுதல் மகசர்கள் மற்றும் 5வது எதிரி பாலமுருகன் என்பவரை கைது செய்து விசாரித்தபோது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அதனை தொடர்ந்து கைபற்றபட்ட கைபற்றுதல் மகசர்கள் ஆகியவைகளில் நானும் என் அண்ணன் இளவரசனும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு நடந்த விபரங்களை கூறாமல் கையெழுத்தை மட்டும் ஒப்புகொண்டு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**